பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03 09 2024 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அனைத்து கல்வி நிறுவனங்களும் மாணவிகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கித் தர வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. நாட்டின் 23-வது சட்ட ஆணையத்தை அமைப்பது தொடர்பான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

3. அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ், இதுவரை நாட்டில் 52 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

4. டெங்கு பாதிப்பை தடுக்கும் வகையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

5. இந்தியா – மொரீஷியஸ் அணிகளுக்கு இடையேயான **Inter Continental** கோப்பை கால்பந்து போட்டி இன்று ஹைதராபாதில் நடைபெறுகிறது.

**>>>><<<<**

அனைத்து கல்வி நிறுவனங்களும் மாணவிகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கித் தர வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

மகாராஷ்ட்ர மாநிலம் புனேயில் உள்ள **Symbiosis** பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், நாட்டின் முன்னேற்றத்தில் பெண்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

அப்பல்கலைக் கழகத்தில் பாலின சமத்துவம் பேணப்பட்டு வருவது பாராட்டுக்குரியது என்றும், பதக்கம் பெற்றவர்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பது அதனை வெளிக்காட்டுவதாகவும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டின் கலாச்சாரம் மற்றும் சமூக அமைப்பை மாணவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக கல்வி நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பிற நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களது அறிவையும், திறமையையும் பயன்படுத்தி, மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கு பாடுபட வேண்டும் என்று திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

இந்த விழாவில், மகாராஷ்ட்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மற்றும் அம்மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து, இன்று மும்பையில் நடைபெறும் மகாராஷ்ட்ரா மாநில சட்ட மேலவை நூற்றாண்டு விழாவில் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

சட்ட மேலவையின் முக்கியத்துவம் தொடர்பான புத்தகம் ஒன்றையும் அந்த விழாவில் அவர் வெளியிடுகிறார்.

**>>>><<<<**

நாட்டின் 23-வது சட்ட ஆணையத்தை அமைப்பது தொடர்பான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இந்த ஆணையமானது, 2027ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் தேதிவரை இப்பொறுப்பினை வகிக்கும் என்று அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணையத்தில் தலைவர், உறுப்பினர் செயலர் உள்ளிட்ட 4 முழுநேர உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்ட விவகாரங்கள் துறை செயலாளர், மத்திய சட்ட ஆலோசகர் ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிப்பார்கள் என்று அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ், இதுவரை நாட்டில் 52 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டிருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்னெடுப்பின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டம் சாதனை படைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு வெளியிட்டுள்ள தரவரிசை பட்டியலில் இந்தியா 40வது இடத்தைப் பிடித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள உலகளாவிய புதுமை கண்டுபிடிப்பு தரவரிசையில் 132 நாடுகள் இடம்பிடித்துள்ளன.

இந்த தரவரிசையில் இந்தியா கடந்த பத்தாண்டுகளில் வேகமான முன்னேற்றத்தை பெற்றிருப்பதாக **Niti Aayog** தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அது வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கடந்த பத்தாண்டுகளாக இந்தியா புதுமைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், அதன் மூலமாக பொருளாதார மேம்பாட்டை அடைந்து வருவதாகவும் கூறியுள்ளது.

>>>><<<<

தேசிய பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு, கல்விச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

மூத்த அதிகாரிகள் இடம்பெற்றுள்ள இந்த குழு, அந்நாட்டின் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளை சந்திக்கவுள்ளது.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் விதமாக இந்தப் பயணம் இருக்கும் என்று அக்கல்லூரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

டெங்கு பாதிப்பை தடுக்கும் வகையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில், குரங்கு அம்மை நோய் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பிறகு, செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அமைச்சர், சர்வதேச விமான நிலையங்களுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் தொடர்ந்து மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

மேலும், தமிழகத்தில் டெங்கு பாதிப்பு இறப்பு விகிதம் குறைவாகவே உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - மா. சு 33 செகண்ட்ஸ்)

சுகாதாரத்துறையில் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்கள், விரைவில் நிரப்பப்படும் என்றும் இந்த செய்தியாளர் சந்திப்பின்போது திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் பருவமழை காலத்தில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை கையாள்வது தொடர்பான செயல்விளக்கம் தீயணைப்புத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது.

தாமிரபரணி ஆற்றில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு மீட்பது என்று பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தீயணைப்புத் துறையினர் செய்து காண்பித்தனர்.

(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் 40 செகண்ட்ஸ்)

>>>><<<<

ஹரியானாவின் **Jind** மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர், 9 பேர் காயமடைந்தனர்.

அங்குள்ள **Hisar - Chandigarh** தேசிய நெடுஞ்சாலையில் சரக்கு வாகனம் ஒன்று பயணிகள் வாகனத்தின் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

**>>>><<<<**

குஜராத் மாநிலம், போர்பந்தர் அருகே, கடலோர பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஹெலிகாப்டர் ஒன்று விபத்துக்குள்ளானது.

அரபிக்கடல் பகுதியில் கப்பல் ஒன்றில் தரையிறங்க முயற்சித்தபோது இந்த விபத்து நேரிட்டதாகவும், அதிலிருந்த நான்கு வீரர்களில் ஒருவர் மீட்கப்பட்டிருப்பதாகவும் கடலோர பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

மீதமுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அப்பணியில் நான்கு கப்பல்கள் இரண்டு விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அது கூறியுள்ளது.

**>>>><<<<**

காஸா – எகிப்து எல்லையில் உள்ள **Philadelphi** வழிப்பாதையில் இஸ்ரேலின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடரும் என்று அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேலின் போர் நடவடிக்கைகளில் வெற்றிகளைப் பெற 14 கிலோமீட்டர் நீளம் கொண்ட **Philadelphi** வழிப்பாதை முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த வாரம் காஸாவில் இஸ்ரேலைச் சேர்ந்த ஆறு பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் கொன்றதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, காஸாவில் உள்ள பிணைக் கைதிகளை மீட்க, ஹமாஸ் அமைப்பினருடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் பிரதமர் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி அந்நாட்டில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**>>>><<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் மகளிர் ஒற்றையர் பேட்மிண்டன் **SH-6** பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற நிதியஸ்ரீ சிவனுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தனது திறமை, கடின உழைப்பு மற்றும் அரப்பணிப்பு மூலமாக முதல் போட்டியிலேயே பதக்கம் வென்ற நித்யஸ்ரீ-க்கு தாம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நித்யஸ்ரீ-யின் சாதனை பலரை ஊக்கப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நித்யஸ்ரீ சிவனின் திறமை மற்றும் கடின உழைப்பு தமிழகத்திற்கு பெருமை சேர்த்திருப்பதாக கூறியுள்ளார்.

**>>>><<<<**

இந்தியா – மொரீஷியஸ் அணிகளுக்கு இடையேயான **Inter Continental** கோப்பை கால்பந்து போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹைதராபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது

**>>>><<<<**

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா - இந்தோனேஷியாவின் **Aldia Sutjiadi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்று ஆடவர் உயரம் தாண்டுதல் இறுதிச் சுற்றில் இந்தியாவின் மாரியப்பன் தங்கவேலு, சைலேஷ் குமார், ஷரத்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பாராலிம்பிக் போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 15ஆம் இடத்தில் உள்ளது.

**>>>><<<<**